UNIVERSITY OF JAFFNA
RECEIVED
2 -11-1986
PERIODICALS
DIV
LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 17 ஸபர் 29 இதழ் 266

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-11-1986

## மட்டு. பெரிய போரதீவில் பலத்த ஆகாயத் தாக்குதல்!

### ஆயிரக்கணக்கானோர் அகதிகள்

[நமது நிருபர்]

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய போரதீவுப் பகுதியில் இரு விமானங்கள், இரு ஹெலிகப்டர்கள் ஆகியன மேற்கொண்ட குண்டுவீச்சு, துப்பாக்கிப் பிரயோகம் ஷெல் தாக்குதல் என்பவற்றில் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர் 20 வீடுகள் சேதமடைந்துள்ளன, பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேற்றுக்காலை இந்த ஆகாயத்தாக்குதல் சம்பவம் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பெரிய போரதீவில் சமாண்டோக்களால் கைது செய்யப்பட்டோர் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருப்பவர்களுள் 60 பேர்வரை கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகைக் கடைகளில் வேலைசெய்பவர்கள். பெரியபோரதீவைச் சேர்ந்த இவர்கள் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்க நேற்று முன் தினம் வந்திருந்தபொழுது கமாண்டோக்களால் கைது செய்யப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை, படுவான்கரை ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து பாரிய தேடுதல் வேட்டை நடாத்துவதற்கு கமாண்டோக்கள் அப்பகுதிகளில் தற்காலிகமாக இரு முகாம்கள் அமைத்துள்ளனர். இந்த முகாம்களிலேயே கைது செய்யப்பட்டவர்களை பணயக் கைதிகளாக வைத்துள்ளார்கள்.

கொக்கட்டிச் சோலையில்

(5ம் பக்கம் பார்க்க)

● 1987 ஜனவரி நடவடிக்கை:

# 'சிவில்நிர்வாககட்டுப்பாடு பிரதேச ஆட்சியாகாது!"

## புலிகள் பேச்சாளர் அறிவிப்பு

(சென்னை, நவ - 2)

**"அடுத்த ஆண்டு ஜனவரி மாதம்முதல் தமிழ்ப்பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்தவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவுசெய்துள்ளது. இந்த நடவடிக்கை இலங்கை அரசு தெரிவிப்பதுபோல ஒருபிரதேச ஆட்சியாகாது" என்று மேற்படி இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் சென்னையில் தெரிவித்துள்ளார்.**

யாழ். குடாநாட்டில் அடுத்த ஆண்டுஜனவரி 1ம்திகதி முதல் சிவில் நிர்வாகத்தை ஒழுங்கமைத்துக் கட்டுப்படுத்த முயலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கை பிரதேச ஆட்சியைப் பிரகடனப்படுத்துவதாகது எனவும் இதற்கும் இலங்கையரசின் புதிய அதிகாரப்பகிர்வு யோசனைகளுக்கு எவ்விததொடர்புமில்லை யெனவும் அப்பேச்சாளர் விளக்கியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இச் செய்தியை உண்மைக்குப் புறம்பாகக்கூறி இந்தியஅரசை தமமீது அதிருப்தி கொள்ள வைக்கமுயல்கிறது எனவும் அப்பேச்சாளர் குற்றஞ்சாட்டினர்.

யாழ் குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தை தமது இயக்கம் ஏற்கனவே நடத்திவருவதாக சுட்டிக்காட்டிய அவர் அடுத்த ஜனவரி 1ம் திகதி முதல் இதனை அமுல்படுத்த ஒருஸ்தாபனரீதியிலான அமைப்பையே நாங்கள் உருவாக்கவுள்ளதாகவும் விளக்கினர்.

### ஈழம் செயலகம்

இந்த ஸ்தாபனமான 'ஈழ செயலகத்தின்' பணிகள்பற்றி அப்பேச்சாளர் விளக்குகையில் இங்குபணியாற்றுபவர்கள் வரிகளைச்சேகரிப்பதுடன், அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது போன்ற பணிகளிலும் ஈடுபடுவார்கள் எனக்கூறினர். குடாநாட்டில் வீதிகள் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் அவற்

(5ம் பக்கம் பார்க்க)

## பெண் நோயாளியின் தாலிக்கொடி அபேஸ்

புங்குடுதீவு, ஞாயிறு

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண்நோயாளி ஒருவரின் தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அனலைதீவிலுள்ள கிராமிய வைத்திய சாலையொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

திருமதி புஸ்பமணி சுப்பிரமணியம் என்பவரின் தாலிக் கொடியே திருடப்பட்டதாகும் இது சுமார் முப்பதினாயிரம் ரூபா பெறுமதியானதாகும் என்று தெரிவிக்கப்பட்டது

சம்பவதினம் நள்ளிரவு சுமார் பன்னிரண்டு மணியளவில் மேற்படி வைத்தியசாலைக்குள் புகுந்த இனந்தெரியாத சிலரினாலேயே அப்பெண்ணின் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## அழுகிய நிலையில் வர்த்தகர் சடலம்!

[ஒட்டுசுட்டான் நிருபர்]

காணாமற்போன பிரபல வர்த்தகரான அம்பலவாணர் நடராஜா துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பிணமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவரது சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டது.

வர்த்தகரான அம்பலவாணர் (வயது 40) கடந்த 7ம் திகதியிலிருந்து காணாமற்போனது தெரிந்ததே

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த செ. பாலன் என்பவர் காலஞ் சென்றவரின் கடைக்குச் சென்று, இத்திமடு என்னும் கிராமத்தில் மிளகாய் விற்பனைக்கிருப்பதாகத் தெரிவித்ததாகவும் அதனைத் தொடர்ந்து மேற்படி வர்த்தகர் அதற்குத் தேவையான பத்தாயிரம் ரூபா பணத்துடன் பாலனுடன்சென்றுள்ளார்.

காட்டுப் பாதை ஒன்றினூடாக அவர்கள் சென்றுகொண்டிருக்கும்பொழுது ஏற்கனவே அங்கு ஒழிந்திருந்த எஸ் புனிதன், க. ரவியன் ஆகியோருடன் பாலனும் சேர்ந்து மேற்படி வர்த்தகரின் வாயில் துணியைவைத்துக் கட்டி பின் பணத்தையும் கொள்ளையடித்ததுடன் அங்கேயே அவரையும் சுட்டுக்கொன்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது

(5ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். - போராளிகள் இன்று இறுதிச் சந்திப்பு

சென்னை, நவ 3

இலங்கைத் தமிழ் போராளிகளுக்கும் தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரனுக்குமிடையே இன்று நடைபெறவுள்ள இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஏற்படும் முடிவையடுத்து இலங்கை விடயத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இவ்வாறு மத்திய நிர்வாக சீர்திருத்தத்துறை இணைய மைச்சர் திரு. ப. சிதம்பரம் திருச்சியில் செய்தியாளரிடையே தெரிவித்தார்.

இப் பேச்சுவார்த்தைகள் சென்னையில் நடைபெறவுள்ளன. [ஊ]

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அஷய ஆண்டு ஐப்பசித் திங்கள் 19-ம் நாள் (5 11-1986) புதன்கழமை காலை 8-30 மணிமுதல் 9-30 மணிவரையுமுள்ள தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது மைத்துனன் / சகோதரன் திருநிறை செல்வன் **கோணேஸ்வரன் (கண்ணன்)** (செனசரட்னம் சீதாலக்ஷமி தம்பதிகளின் புதல்வன்) அவர்களுக்கும் | எனது ஏகபுத்திரி திருநிறைச் செல்வி **சுந்தரமணி (மணி)** (ம வே. திருஞானசம்பந்த பிள்ளை அவர்களின் பேர்த்தி) அவர்களுக்கும் |

நல்லூர் சிவன்கோவிலில் சிவனருளால் திருமணம் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

**யோகநாதன் கோணேஸ்வரி** தம்பதிகள்,
அரசேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**ம. வே. தி. சண்முகசுந்தரம்**
407, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(A 3045)

### க. பொ. த. உயர்தரம்

## வடமராட்சி மாணவர் பெறுபேறு விபரம்

பருத்தித்துறை, ஞாயிறு

கடந்த ஆகஸ்ட்மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து தோற்றிய மாணவர்களுள் அறுபது வீதமானோர் பல்கலைக் கழக அனுமதி பெறும் தகைமை பெற்றுள்ளனர்

இக்கல்லூரி மாணவர்களாகிய ஆர். கிரிதரன், பீ. மணிவண்ணன், கே.முரளி, நாதன் மார்க்கண்டன் ஆகிய நான்கு பேர் முறையே மூன்று ஏ ஒரு பீ என்ற அடிப்படையில் சித்தியடைந்துள்ளனர்.

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் நாற்பது வீதமான மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெறும்

(5ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் லைசென்ஸ் புதுப்பிப்பு

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி தமது விமானிக்கான அனுமதிப்பத்திரத்தை [லைசென்ஸ்] அண்மையில்புதிப்பித்தார்!

புதுடில்லி பாலம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு

(5ம் பக்கம் பார்க்க)

### சென்னை சூட்டுச் சம்பவம்:

## ஈ. பி. ஆர். எல். எவ். மன்னிப்புக் கோருகிறது

[சென்னை]

திருவள்ளுவர் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்களுக்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பொது மன்னிப்பு ஒன்றை தமிழக மக்களிடம் கோரியுள்ளதுடன் இறந்தவரின் குடும்பத்துக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக இம் முன்னணியின் பொதுச் செயலாளர் பத்மநாபா விடுத்துள்ள அறிக்கையொன்றில் இத் துப்பாக்கிப்பிரயோகத்தில் ஈடுபட்டோர்மீது இந்திய குற்றவியல் சட்டதிட்டங்களிற்கேற்ப தமிழக பொலிஸ் மேற்கொள்ளும்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கனரக மின்துளை யந்திரம், பெரிய கோவில் மணிகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 5547]

Christombu Farm சேவற்குஞ்சுகள் 5ம் திகதி புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் [C 5543]

T S ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெட்- ஸ்கந்த ஷஷ்டி கவசம், சூலமங்கலம், சீர்காழி 1வது குருமஹா சந்நிதானம் [நல்லை ஆதீனம்], அருணகிரி பாடியது. வெவ்வேறு கசெட்டுகளில். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C 5550]

யாழ் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் வீடு கட்டக் கூடிய நல்ல சுற்றுடலில் காணி விற்பனைக்குண்டு. S. பரதாஸ் 218/2, பலாலி வீதி, (கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில்) கந்தர்மடம். [C 5535]

குளிர்சாதனப் பெட்டிக்கு இணைக்கக்கூடிய நாஷனல் 110 கம்பிறசரும் 110 ராண்ஸ்போமரும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த அருளையா, 7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (C 5530)

புலவிதமான பாவித்த வீட்டுத்தளபாடங்கள், முதிரை, பலா, தேக்கு அலுமாரிகள், கட்டில்கள், குளிர்சாதனப் பெட்டி. கசற்றேடியோக்கள், Dinner Set, Pyrex Tea Set, கிளாஸ், சில்வர் வகைகள், Formica சாப்பாட்டு மேசைகள், Vacuum Cleaners, Floor Polisher எலற்ரிக் அயன் Fan, Kenwood Chef, Electric Water Boiler, Show cases T. V Stand, கண்ணாடி மேசைகள் Meat safe மற்றும்பல உடன் விற்பனைக்கு M. தியாகராஜன், 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம், (C 5503)

## விற்பனைக்கு

Candy பெரிய குளிர்சாதனப்பெட்டி, கடைப்பாவனைக்குரிய தேநீர் தயாரிக்கும் Stainless Steel English Boiler, Kenwood Chef மற்றும் பல உடன் விற்பனைக்கு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5504

## வகுப்புகள்

க. பொ. த. (உயர்) 87ம் ஆண்டு மாணவருக்கு வினா விடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு விஞ்ஞான பாடங்கள் மட்டும் 7-11 1986 ஆரம்பமாகிறது. Science Centre, Karaveddy (C 5474)

கேக் ஐசிங் வகுப்புக்கள் [3 Months Course] திங்கட் கிழமையும் புதன் கிழமையிலும் 4 மணிக்கு நடைபெறுகின்றன இடம்:- 10/5 சிவன் வீதி, திருநெல்வேலி (சென்றல் நேர்சிங்கோமிற்கு அருகிலுள்ள ஒழுங்கையில் ) [C5500]

க. பொ. த [உயர்] 87-ம் ஆண்டு கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவு மாணவருக்கு 7 - 11 - 1986 பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. Modern Education Centre, Karaveddy. (C-5475)

Radio, T.V, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைண்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகின்றன. தொடர்பு Vispa Engineering Aid Hall No.328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். [C 5544]

## WANTED

Wanted, Nursery School teachers, qualified in Music and English Apply parish priest St James church Nallur Application Close on: 15-11-86. (C 5538)

## பயிற்சி

Radio, T V: Repairing செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. காலம் 4 மாதம். Sat., Sun. பி. ப. 5-00—7-30. ஆரம்பம்: 1-11-86. அனுமதிகள் 15-11-86 வரை வழங்கப்படும். விபரங்கட்கு: Varuba Electrical, சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். (C-5461)

## தேவை

குடும்பப் பொறுப்பில்லாத 25-40 வயதுடைய வீட்டுப் பணிப் பெண் உடன் தேவை. இந்திய வம்சாவளியினர் விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். S குமாரசூரியர், உபதபாற்கந்தோருக்கு கிட்ட, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (C 5516)

## தவறிவிட்டது

29 10.86 அன்று வவனியாவில் இருந்து யாழ்ப்பாணா நோக்கி வந்த காரைநகர் இ.போ.ச பஸ்ஸில் பிரயாணம் செய்த வ. கங்காதரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு என்பவருடைய கடவுச் சீட்டுடன் பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 5533]

## முதலாவது பிறந்ததின விழா



### செல்வன் கஜேந்திரன்

மாரியம்மன்வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம்-குணவதிதம்பதியின் செல்வப்புதல்வன் கஜேந்திரன் 03-11-86 (இன்று) தனது முதலாவது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றார். உயர்ந்த கல்வியும், நிறைந்த செல்வமும் குன்றாத வீரமும் பெற்று நீடூழிகாலம்வாழ அப்பா, அம்மா, மாமன்மார், சித்திமார், மாமிமார், பெரியம்மாமார், அம்மம்மா, அப்பப்பா ஆகியோருடன் சவூதிஅரேபியாவையும், ஜேர்மனியையும் சேர்ந்த சித்தப்பாமாரும் கனடாவிலிருக்கும் பெரியம்மாவும் சித்தியும் வாழ்த்துகின்றார்கள். [C 5546]

## சேவை

திருமணங்கள் நிச்சயிக்கத் தாமதமா? உடன் தொடர்பு கொள்க எம்மிடம் நல்ல நிலையில் உள்ள ஆண்/பெண் ஜாதகக் குறிப்புகள் உண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்க :S பரதாஸ், 218/2 பலாலி வீதி, [கந்தர்மடச் சந்திக்கு அருகாமையில்] கந்தர்மடம். [C 5536]

உங்கள் இல்லத்துக்குத் தேவையான சகல விதமான நவதானிய வகைகள், பாலமா வகைகள், பாடசாலை உபகரணங்கள், கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுகள் உங்கள் வீட்டில் இருந்தபடியே பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்பு கொள்ளவும்: M G M, 777. K.K.S Road, Jaffna. T.P 22611. [C 5048]

தரமான போட்டோஸ்ராற் பிரதிகள், தெளிவான 'ரோனியோ' பிரதிகள் தமிழ்-ஆங்கில 'ரைப்பிங்' வேலைகளுக்கு; கிளீன்கட், 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22823. C 5422

பழைய குளிர்சாதனப் பெட்டிகள் புதிய குளிர்சாதனப் பெட்டிகள் எம்மால் வேண்டப்படும், விற்கப்படும். எம்மால் சீர் அமைக்கப்பட்டு உத்தரவாதத்துடன் தரும் சேவையை ஆரம்பித்துள்ளோம். பென்குயின் எயார் கொன் எஞ்ஜினியர்ஸ், A B. சபாநாதன் and C. கோபாலரட்ணம் 14, மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [C 5167]

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இத்துடன் மணமகள், மணமகன் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம் செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ நாகேந்திரராசா, 174/16, கோவில்வீதி. (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர். (C-5499)

## பாடசாலை தேவைகள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வித்தியாலயத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் குறைபாடுகள் பற்றியும் அவசியத் தேவைகள் பற்றியும் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்தை அவரது அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்கள்.

பாடசாலை அதிபரும் சங்கத் தலைவருமான திரு எஸ் ஏ. லோறன்ஸ் சங்கச் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி திரு ஏ மரியநாயகம் ஆகியோரைக் கொண்ட குழுவினரால்கல்வி பணிப்பாளருடன் நடாத்திய இப் பேச்சுவார்த்தைகளின் போது பாடசாலையில் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்த வேலைகள் பற்றியும் ஆசிரியர் பற்றுக்குறை பற்றியும் மற்றும் தேவைகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இத் தேவைகளை விரைவில் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கல்விப்பணிப்பாளர் திரு சுந்தரலிங்கம் சங்கக் குழுவினரிடம் உறுதியளித்துள்ளார்.

## A/L 87

தூய பிரயோக கணிதம்
துரிதமீட்டல் பகல்நேர வகுப்பு
**ஆரம்பம்: 5-11-86**

7-45: காவிகள்
9-00: அட்சரகணிதம்
(கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:
**ரவிமோகன்**
யாழ்ப்பாணம்.
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)
[C-5514]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருஷம் ஐப்பசித் திங்கள் 17-ம் நாள் [03-11-1986] திங்கட்கிழமை பகல் 10-00 மணிக்கு மேல்வரும் சுபமங்கள நல்வேளையில்,

| எமது கனிஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **திருச்செல்வராஜன்** | **கலாவதி** |
| (அரசினர் ஒப்பந்தகாரரும், சதாஸ் மோட்டோர்ஸ் யாழ்ப்பாணம், பங்காளரும்) | (யாழ் பல்கலைக்கழகம், கலைப்பீடம் 2-ம் வருடம்) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு, நல்லூர், பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விருந்துபசாரம்:-
மணமகள் இல்லம் 3-11-86 திங்கள் பி. ப. 4 மணி
மணமகன் இல்லம் 4-11-86 செவ். பி. ப. 4 மணி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| திரு. திருமதி | திரு. திருமதி |
|---|---|
| செ சதாசிவமும் | த. தியாகராசாவும் |
| (அரசினர் ஒப்பந்தகாரர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்) | (ஒப்பந்தகாரர்) |
| குடும்பத்தினரும். | குடும்பத்தினரும். |
| "சதாஸ்", | "தாயகம்", |
| 519/4, கஸ்தூரியார் வீதி, | 2, நாயன்மார் வீதி, |
| யாழ்ப்பாணம். | நல்லூர்-யாழ்ப்பாணம். |

[C-5228]



# யுகசக்தி

பல்சுவை வார இதழ்
மிக விரைவில்
**உங்கள் கைகளில்!**
வெளியீடு:-
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்,
125A, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.
(A-3013)

இன்று
எமது மூன்றுவது மாபெரும் வீடியோ வெளியீடு
ரஜனிகாந்தின்
மாபெரும் வெற்றிச் சித்திரம்
**மாவீரன்** (தரமான பிரதி)
நியூ விக்ரேஸ்
"எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்"
யாழ்ப்பாணம்.
[A 2843] போன்:- 23532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

# 'ஐஸ்லந்' சந்திப்பு உலக அமைதிக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது

## — அமெரிக்க அதிபர் றேகன்

நியூயோர்க், நவ 2

**சோவியத்தலைவர் மிகைல் கொர்பசேவுடன் கடந்த மாதம் தாம் ஐஸ்லந்தில் நடத்திய பேச்சுவார்த்தை உலக அமைதியை வலுப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தியிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றேகன் தெரிவித்துள்ளார்.**

திரு. றேகன் தமது நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை யொன்றிலே இவ்வாறு தெரிவித்தார்.

திரு. றேகன் மேலும் தெரிவிக்கையில்; ஐஸ்லந்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்க உதவக்கூடிய வகையில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு ஜோர்ஜ்ஷுல்ஸ், சோவியத்வெளிநாட்டமைச்சர் திரு எடிவான் செவர்னட்சே ஆகியோர் அடுத்தவாரம் வியன்னாவில் சந்தித்துப்பேசுவார்கள் என்றும் அமெரிக்க யோசனைகள் இன்னும் விலக்கப்படவில்லை என்றும் விண்வெளி போராயுதத் திட்டத்தைக் கைவிடும்படி சோவியத் மேற்கொள்ளும் நெருக்கடிகளுக்கு தாம் பணிந்துவிடப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை விண்வெளிப் போராயுதத் திட்டத்தைக் கைவிடாமல் உடன்பாடுகளை ஏற்படுத்த அமெரிக்கா பல புதிய தடைகளை தொடர்ந்து போடுவதாக சோவியத்யூனியன் குற்றம் சாட்டியுள்ளது. (ஓ)

## குண்டு வெடிப்பில் ஒருவர் பலி 13 பேர் காயம்

இஸ்லாமாபாத், நவ. 2

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் குண்டுவெடிப்புக் காரணமாக ஒரு பஸ் வண்டி இரண்டாகப்பிளந்து சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணம் செய்தவர்களில் ஐந்து பேர் இறந்துள்ளனர். பதின்மூன்றுபேர் காயமடைந்தனர். (ஓ)

## புனிதமண்



வடலைவெளி உப்புக் கடலேரிக்குக் கிழக்கேயுள்ள பகுதியிலும், கல்லுண்டாயிலும் இயல்பாகவே கோடை காலத்தில் உப்பு விளைகின்றது. கோடை காலத்தில் மக்கள் தாராளமாக அள்ளிச்செல்வதைக் காணமுடியும்!

உப்பு என்றால் எல்லா லொறிகளும் ஆனையிறவுக்கே ஓடுகின்றன! மினி சினிமா... மினிபஸ் என மினிகள் பெருகிவரும் இந்நாளில் வலைபிலும், கல்லுண்டாயிலும் மினி உப்பளங்கள் உண்டாகினால் என்ன? குடாநாட்டில் பல தொழிலாளர்கட்கும் வேலைவாய்ப்பு உண்டாகுமே!

என்ன வளம் இல்லை இந்தக் குடாநாட்டில்? சிந்தித்துச் செயல்பட்டால் வெற்றி எம்பக்கமே!

— பாணபத்திரன்

## சென்னையில் நடந்த துப்பாக்கிச் சூட்டினல் ஒருவர் பலி; இருவர் காயம்

சென்னை, நவ. 2

சென்னையில் நேற்று இடம் பெற்ற சண்டையொன்றில் தமிழ்ப்போராளிகள் குழு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் இறந்துள்ளதாகவும், இருவர் காயமடைந்துள்ளதாகவும் சென்னை பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது: திருவள்ளுவர் நகரில் வாடகை வீடொன்றில் குடியிருந்த ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியைச் சேர்ந்த நான்கு பேருக்கும் அப்பகுதியிலுள்ள சிலருக்குமிடையே ஏற்பட்ட சிறு தகராறு பலத்த மோதலாக உருவெடுக்கவே போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது மூவர் காயமடைந்தனர். காயமடைந்த மூவரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லும் வழியில் ஒருவர் இறந்துள்ளார்.

இதேவேளை போராளிகள் தரப்பில் காயமடைந்த நன்கு பேர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியைச் சேர்ந்த பத்துப்பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்த 6 இயந்திரத் துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இந்திய ஆயுதச் சட்டத்தின் கீழ் தமிழ்ப்போராளிகள் மீது வழக்கொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ஓ)

## பல்கேரிய தொழிற்சாலை விபத்தில் 17 பேர் பலி; 19 பேர் காயம்

லண்டன், நவ 2

பல்கேரிய இரசாயனத் தொழிற்சாலையொன்றிலேற்பட்ட விபத்தொன்றில் பதினேழுபேர் இறந்துள்ளதாகவும், பத்தொன்பதுபேர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தைத் தொடர்ந்து தொழிற்சாலையின் சுற்றாடல் அசுத்தமடைந்துள்ளது. இதனல் இப்பகுதியிலுள்ள மக்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். (ஓ)

## இராமேஸ்வரம் கரையில் பிளாஸ்டிக் படகிலிருந்த பொருட்கள் பறிமுதல்

சென்னை, நவ. 2

ராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் பிளாஸ்டிக் படகு ஒன்றிலிருந்துஇரண்டுவீடியோ கசெட் றெக்கோடர்களையும், நாலாயிரம் ஸிப்புகளையும் இந்திய சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்

இந்தப்படகு இலங்கையிலிருந்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களுடன இந்தியா வந்ததாகத் தெரியவருகிறது.

இதேவேளை இந்தியாவிலிருந்து இலங்கைநோக்கி புறப்பட்ட இன்னெரு படகினை இடைமறித்த இந்தியசுங்கஅதிகாரிகள் படகிலிருந்த ஒருலட்சத்துஇருபதினாயிரம் ரூபா பெறுமதியான லுங்கிகள், பீடிக் கட்டுகள் என்பவற்றைக் கைப்பற்றியுள்ளனர். (ஓ)

## "வழக்குகளை சாதுரியமாக ஆராய்ந்து தீர்ப்புவழங்கியவர்'

யாழ்ப்பாணம், திங்கள்

''வழக்குகளை மிகவும் திறமையாகவும் சாதுரியமாகவும் ஆராய்ந்து சரியான தீர்ப்பை வழங்கியவர் மாவட்ட நீதிபதி வி பி. சுந்தரலிங்கம்'' இவ்வாறு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதவானக பணியாற்றி ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு இடமாற்றலாகிச் செல்லும் நீதிபதி வி. பி. சுந்தரலிங்கத்திற்கு சாவகச்சேரிச் சட்டத்தரணிகளால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் சட்டத்தரணி ஆர். உருத்திரா குறிப்பிட்டார்.

இந்த விருந்துபசாரத்துக்குச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் செ பாலகிருஷ்ணர் தலைமை வகித்தார்

அவர் மேலும் உரையாற்றுகையில் மாவட்ட நீதிபதி வி பி சுந்தரலிங்கத்தை தனக்கு அதிக காலம் தெரியுமென்றும் அவரின் கண்ணியத்தையும் வழக்குகளில் காட்டும் அதிவிவேகத்தையும் தான்மிகவும் பாராட்டுவதாகவும், அவரின் இடமாற்றம் சாவகச்சேரி மக்களுக்கு பேரிழப்பு என்றும் கூறினர்.

சட்டத்தரணி எஸ் கே. திரவியநாயகம் பேசுகையில் கூறியதாவது;'நீதிபதி திரு வி பி சுந்தரலிங்கம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு வருகிறர் என்றபோது நான்மிக மகிழ்வடைந்தேன். அவர் இங்கு வந்தபோது மாவட்ட நீதிமன்றம் எரிந்திருந்தது பல வழக்குகள் தேங்கிக் கிடந்தன. தேங்கிக் கிடந்த வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவந்த பெருமை அவருக்கே சாரும்''

இடமாற்றலாகிச் செல்லும் மாவட்ட நீதிமன்ற நீதிபதி வி.பி.சுந்தரலிங்கம் தமதுரையில் கூறியதாவது! ''சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றுக்கு நான் நீதிபதியாக வந்தபோது மன்று தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. அதன் பதிவேடுகளை யாழ். உயர்நீதிமன்றத்தில் இருந்தன மக்களுக்குச்சேவை செய்யும்நோக்கமாகவே நான் இப்பதிவேடுகளை பல சிரமங்களுக்கு மத்தியில் எடுத்து வந்தேன். செயலில் நேர்மையாகச் செயற்படின் எம்மை வெற்றி தேடிவரும் மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கமாக அமைந்ததே எனது சேவை.'

இவ் விருந்துபசாரவைபவத்தில் சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் எஸ் கந்தசாமி. வி. பொ மயில்வாகனம் ஆகியோரும் உரையாற்றினர். (ஔ)

பவர்ஸ் உரம்
ஒப்பற்றது

ABC

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிடெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82 (A)

ரூபா 2,000/-க்கும்மேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நண்பர்கள் உருவாக்கப்படுவதில்லை. அவர்கள் கண்டு பிடிக்கப்படுகிறார்கள். தனித்துப்போகிறவர்களுக்குள்ள கஷ்டம் இதுதான் தங்களைச் சுற்றியுள்ளவர்களின் நட்பை இவர்கள் புரிந்துகொள்ளத்தவறிவிடுகிறார்கள்.

—கிறிஸ்டோபர் பனிஸ்டர்

# நமதுநோக்கு

## சிங்களவர் மத்தியில் வளரும் நேச சக்திகள்

மனிதன் கூட்டமாக வாழும் சுபாவம் கொண்ட ஒரு பிராணி. முற்றும் துறந்த முனிவர்களாலும்கூட சமுதாயத் தொடர்புகளை அறுத்துக்கொண்டு வாழ முடியாது. ஏதோ ஒருவகையில் ஏனைய மாந்தர்களோடு இணைந்துவாழ அல்லது தொடர்புகொள்ளவேண்டியசூழ்நிலை இருக்கின்றது.

ஒரு குடும்பம், ஒரு சமூகம், ஓர் இனம் என வளர்ந்த மனிதப்பரிணாமத்தில், நிறங்கள், சாதிகள், மதங்கள், வர்க்கங்கள் என்ற பேதங்களும் இவைகளுக்கு ஏற்றாற்போல், பகுதிகள், தேசங்கள், நாடுகள் என்ற நில அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

அதாவது, மனிதன் ஒரு சமூகப் பிராணியாகஇருந்த போதிலும், அவன் தான் சார்ந்துள்ள இனம்,மொழி. மதம் மற்றும் வேறு தனித்துவமான அம்சங்களுக்கு ஏற்ப கூட்டாகத் தனித்து வாழ்வதையே விரும்புகின்றான். அல்லது அவ்வாறு வாழவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றான்.

மனித சமுதாயத்தின் ஆரம்பகாலம் தொட்டு இந்த அம்சங்கள் பல்வேறு உட்பிரிவுகளுக்கும் இடம் கொடுத்தபடி வளர்ந்துவந்துள்ளது.

பரந்த விண்வெளியில் புதிய உலகங்களைக்கண்டு பிடிக்கும் பெருமுயற்சியில் இறங்கியுள்ள இன்றைய மனிதன் கூட தனக்குள் வளர்ந்துவிட்ட இன, மொழி, நிறவேற்றுமை உணர்வுகளிலிருந்து விடுபட முடியாமலிருப்பதைக்காண்கின்றோம்.

எனவே இன, மத, மொழி பேதங்களற்ற ஒரு உலக சமுதாயம் உருப்படுவதாயின் அதற்கு இன்னும் எத்தனையோ காலம் காத்திருக்கவேண்டியிருக்கும். இருந்தபோதிலும், மனிதன் மிருகங்களைப் போலன்றி தனது பொதுவான தன்மைகளில் பொதுவான நோக்கங்களில் ஒற்றுமைப்படவும் உடனிருந்து வாழவும் முயன்று வந்துள்ளான். அந்த முயற்சிகளின் உன்னதமான உலகளாவிய தோர் எடுத்துக்காட்டாக இன்றைய ஐ. நா. சபையைக்கூறலாம். ஆனால் மனித சமுதாயத்தைப் பீடித்துள்ள போட்டா போட்டியும், அதிகாரவெறியும் ஐ. நா. போன்ற அமைப்புக்களையும் கூட ஆட்டிப்படைத்து வருகின்றன.

அவ்வளவும்ஏன், நம்மையே ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டால் போதும் இன்றைய நிலைக்கு நாம் தள்ளப்பட்டதற்கான காரணங்கள் பட்டென தெளிவுபெறும்.

இந்த நாட்டில் தமிழர் என்றொரு இனம் இருக்கின்றது. அதற்கென்றொரு, மொழி, கலை, கலாசாரம் மட்டுமல்ல பிரதேசமும் இருக்கின்றது என்பதை ஆட்சிபீடத்தில் அமர்ந்தவர்கள் அங்கீகரிக்க மறுத்தார்கள், அவர்களுடன், ஒன்றாக அமரும் வாய்ப்பினைப் பெற்றவர்களும் தங்களுக்குள் போட்டா போட்டிகளை வளர்த்தார்கள். இதன்விளைவு அங்கே சிங்கள தேசியம்வளர உதவியது — இங்கே தமிழர் தேசியம் சீர்குலைந்தது.

சிங்களவர் மத்தியில் தமிழருக்கெதிரான உணர்ச்சிகள் மிக மோசமான நிலைக்கு வளர்க்கப்பட்டு தமிழர் பிரதேசம் முழுவதையுமே அரசராணுவம் ஆதிக்கம்செலுத்த முனைந்து நிற்கின்றது.

மனிதனை மனிதன் மதிக்கவும், மற்றவனின், மொழியை, மதத்தைக் கௌரவிக்கவும், அவனுக்குரிய அரசியல் பங்கினை வழங்கவும் முடியாமல் போனால் புறக்கணிக்கப்பட்டவன், என்றோஒருநாள் வெகுண்டெழவே செய்வான் என்பதை இன்றைய தமிழர் போராட்டம் இந்த நாட்டுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலைமையிலும் இந்த நாட்டில் சிங்களவர் தமிழர்களுக்கிடையில் நேச உணர்வை கட்டி எழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டிய அவசியத்தை வண. பிதா போல்கஸ்பேர்ஸ், வண பிதா யோகான் தேவானந்த போன்றவர்கள் வற்புறுத்திவருகிறார்கள்.

உணர்ச்சிமயப்படுத்தப்பட்டுள்ள சிங்கள மக்கள் மத்தியில் இவர்கள் மட்டுமல்ல இவர்கள் போன்ற நியாய சிந்தையுள்ள இன்னும் அநேகர் இருக்கவே செய்கிறார்கள் என்பது பெரும் ஆறுதல். கடந்த கால இனக்கலவரங்களின் போது ஸ்தாபனரீதியில் சிங்கள வெறியர்கள் நடத்திய அட்டூழியங்களிலிருந்து தமிழ் மக்கள் அநேகரை சிங்கள அன்பர்கள் பலர் காப்பாற்றினார்கள் என்பதை யார் மறுப்பர்?

எனவே இம்மாதிரியான நேசசக்திகள் வளர்வதும், வளர்க்கப்படுவதும் தமிழ் மக்களின் தன்மானப் போராட்டத்திற்கு உறுதுணையாக அமையும் என்று சொல்லத் தேவையில்லை.

### யாருடையது

யாழ்ப்பாணம் ஐதுறாஸ்மக்காம் வீதி 17ஐ சேர்ந்த திரு. எஸ். எம். எம். சித்திக் என்பவர் சித்தங்கேணி பஸ்தரிப்பு நிலையத்தில் ஒரு லேடீஸ் பேசினை பணத்துடன் எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும். (க)

## இனப்பிரச்னை:—

# 'சிங்களவர் உண்மையை உணர தலைப்பட்டுள்ளனர்'

### பிஷப் லக்ஷ்மன் விக்கிரமசிங்கா நினைவுதினக் கூட்டத்தில் வண. பிதா தேவானந்தா

(யாழ்ப்பாணம், திங்கள்)

''இலங்கையின் தென்பகுதியில் வாழும் சிங்களவர்கள் பலர் இப்போது பிரச்னையின் உண்மை நிலையை உணரத் தலைப்பட்டுள்ளனர். அங்குள்ள அரசியல் மதஸ் தாபனங்களின் மீது அவநம்பிக்கை கொண்டுள்ள அவர்களிற் பலர் பல பிக்குகள் உட்பட வடபகுதிக்கு வந்து உண்மைநிலையை அறிய விரும்புகின்றனர்''

இவ்வாறு பிஷப் லக்ஸ்மன் விக்கிரமசிங்க நினைவு தினக் கூட்டம் கடந்த சனிக்கிழமையன்று பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய வண பிதா. யோகன் தேவானந்தா குறிப்பிட்டார். வணபிதா, ஜெயசீலன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

வண யோகன் தேவானந்தா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''பிஷப் விக்கிரமசிங்கா அகிம்சை வழியிலேயே நம்பிக்கை கொண்டிருந்தார். தொழிலாளர் நலனில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார் 80ம் ஆண்டு ஜூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமைக்காக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்காக அவர்போராடி வந்தார். அதன்பின்னர் 82ம் ஆண்டில் தென் பகுதியில் அரசாங்கம் சிங்கள விவசாயிகள் பலரின் காணிகளைப் பறித்து பல் தேசியக் கம்பனிகளிடம் ஒப்படைக்க முயன்றபோது அதனை எதிர்த்த அவ்விவசாயிகளுக்கு ஆதரவளித்தார். தொழிலாளர் ஐக்கியத்துடன் ஸ்தாபனமயப்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையையும் அவர் அப்போது முன்வைத்தார்.

''பிஷப் விக்கிரமசிங்கா தமிழர்பால் மிகுந்தஅன்புகொண்டிருந்தார். தமிழர் படும் துன்பங்களை தென்பகுதி மக்களுக்கு விளக்குவதற்கு அவர் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

''83 ஜூலை கலவரங்களின் போது அவர்லண்டனில் வைத்திய சிகிச்சைக்காக சென்றிருந்தார். அவர் நாடு திரும்பியவுடன் பாதிக்கப்பட்ட தமிழர் இருந்த மலையக. கிழக்கு. வடக்கு, கொழும்பு பகுதிகளுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட தமிழர்களின் துயரங்களைக் கேட்டறிந்து மிகுந்த துயருற்றார்.

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு காரணங்கள் என்ன என்பதை விளக்கும் அறிக்கையொன்றை நாம் தயாரித்துள்ளோம். இனப் பிரச்னை தோன்றக் காரணமானவர்கள் யார்? இப்பிரச்னையை எவ்வாறு தீர்க்கலாம் என்பது போன்றவற்றை இவ்வறிக்கை விளக்குகின்றது. இதில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதகுருமார், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உட்பட பெருந்தொகையானோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

தமிழரும் சிங்களவரும் சந்தித்துக்கொள்வதை நிறுத்திக்கொள்ளக் கூடாது. இரு சமூகங்களிடையேயும் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்'',

வண பிதா போல் கஸ்பர்ஸ் தமதுரையில் கூறியதாவது:-

''இலங்கையில் கிறிஸ்தவசமயத்தின் சரித்திரத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். போத்துக்கேயர் இங்கு வந்த காலம் முதல் 1956ம் ஆண்டு வரை முதல் பிரிவு இக்கால கட்டத்தில் கிறிஸ்தவ மக்கள் ஏனைய சமூகத்தவரிடையே இருந்து தனிமைப்படுத்தப் பட்டவாழ்க்கையே வாழ்ந்தனர், ஏனைய சமூகத்தவருடன் பழகுவதால் தமது சமயத்துக்கு பல பங்கங்கள் ஏற்படலமென கிறிஸ்தவர்கள் கருதியதே இதற்குக் காரணம் ஆயினும் பின்னர் 56ம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டத்தின் பின்னர் நிலைமை மாறியது. சிங்களப் பிரதேசங்களில் வாழும் சிங்களக் கிறிஸ்தவமக்கள் ஏனைய சிங்களவர்களுடன் இணைந்து பல பணிகள் புரிந்தனர் சிறிது காலம் தாழ்த்தி தமிழ்க் கிறிஸ்தவர்களும் தமது வீட்டுக்குள்ளிருந்து வெளிவந்த ஏனைய தமிழ் மக்களுடன் இணைந்து செயலாற்றத் தொடங்கினர்.

'இவ்வாறு சிங்கள கிறிஸ்தவர்கள் ஏனைய சிங்களவர்களுடன் இணைந்து செயலாற்றியது, ஒரு முக்கிய தீமையை உருவாக்கியது. அது சிங்களக் கிறிஸ்தவர்கள் சிங்கள இனவாதத்துக்குப் பலியானார்கள்; இது போல தமிழ் கிறிஸ்தவர்களும் ஓரளவு தமிழ் இனவாதத்துக்குப் பலியானார்களா என்பதை தமிழரே கூறவேண்டும்.

''பிஷப் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் நடாத்திவரும் போராட்டத்திற்கான காரணங்களை நன்கறிந்திருந்தார்''

பேராசிரியர் சு நேசையா தமதுரையில் கூறியதாவது:-

''நான் தந்தை செல்வாவுடன் இணைந்திருந்த காலத்தில் கூட பிஷப் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறவேண்டியிருந்தது.

தமிழ் மக்கள் மத்தியில் ஆழ்ந்த தேசிய உணர்வினை ஊட்டினார். தந்தை செல்வா தமிழர் தனித்தேசிய மக்கள் என்பதனையும் அவர்களுக்குரிய தனிப்பிராந்தியம் தாயகம் ஆகியவை உள்ளதென்பதையும் தமிழர்க்கும் சுய நிர்ணய உரிமையுண்டென்பதனையும் தமிழ் மக்கள் மனதில் ஊட்டியவர் அவரே.

''சிங்கள மக்களுக்கும்தமிழ் மக்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டுமென்பதை பிஷப்விக்கிரமசிங்க வலியுறுத்தி வந்தார் ''

திரு. ராஜன் போல் நன்றியுரை கூறினார்.

# சூரசங்காரம்

முருகப்பெருமான் ஸ்கந்தசஷ்டி ஆறுநாளுமே சூரன்போர் நிகழ்த்திச் சூரனைச் சங்காரம் செய்து சேவலும் மயிலுமாக ஏற்றருளியதோடு தேவர்களுக்கும் பகையற்ற சுதந்திர வாழ்வை அருளினார். இந்த ஆறு நாளும் நியமாக விரதமனுட்டிப்பதேயல்லாமல் முருகனையும் முருகனின் அருட்சிறப்புக்களையும் சிந்திப்பதும் வாசிப்பதும் சிந்தனைக்கும் வாசிப்பதற்கும் சிறப்பு இச்சிறப்பு முருகன் சூரனைச் சங்கரித்தது தொடர்பாக அமையும் போது அழகும் உடையதாய்விடும்.

சூரன் தன் வீரர்கள் பிள்ளைகள் மட்டுமன்றித் தன் தம்பியும் ஒப்பற்ற வீரனுமான சிங்கமுகாசூரன் முருகப் பெருமானால் வதைக்கப் பட்டதை அறிந்து சகோதர பாசத்தால் புலம்பித்துடித்தான். பின் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு யுத்தத்திற்குச் சென்றான் தன் தம்பிக்கு ஏற்பட்ட அழிவே தனக்கும் உண்டென்று சிந்திக்காது தன்னை மிகவும் வியந்த நிலை கத்தமான ஆணவத்தின் இயல்பாகும். ஆணவம் கொண்ட சூரன் யுத்தத்துக்குப் புறப்பட்டதையும் அவன் உடமையாக கணக்கிலடங்காத அவுண சேனைகள் யுத்தத்திற்கு ஆயத்தமாக வந்திருப்பதையும் அறிந்த முருகப் பெருமான் யுத்தத்திற்குப் புறப்படுகின்றார். முருகபெருமான் செல்வதற்காக வாயு தேவன் செலுத்துகின்ற தேர் ஆயத்தமாக நின்றது. அப்போது முருகன் அழகாகவும் விரைவாகவும் விரைந்து எழுந்து யுத்தத்திற்காகத் தனது திருக்கரங்களில் மழு, குலிசம், சூலம், சத்தி வேல், வாள், பரிசை, சக்கரம், தண்டாயுதம், எழுப்படை, வில்லு, அம்பு கைவேல் ஆகிய ஆயுதங்களைத் தனது திருக்கரங்களில் எடுத்தருளினார்

அளவிறந்த கொடுமை மட்டும் புரிபவனாக மட்டும் சூரன் இருந்திருந்தால் சூரன் வேறு விதமான அழிவை அடைந்து எண்ணில் கோடி யுகம் நரகில் வருந்துவான். உலகில் துன்புற்றாலும் ஆதரவான முகம் ஒன்றைத் தானும் காணும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது இங்கு சூரனுடன் போர் செய்ய முருகனே புறப்படுகின்றார் என்றால் தனது திருக் கரங்களில் பல தெய்வப் படைக்கலங்களை எடுத்துச் சென்றார் என்றால் சூரன் கொடுமை மட்டும் செய்தவனல்லன் சூரன் செய்த கொடுமைகளைக் கணக்கிட்டாலும் அவன் செய்த தவச்சிறப்பைக் கணக்கிடமுடியாதென்பதை நாம் நினைக்க வேண்டும். அளவற்ற தவச் செல்வம் உடையவனாகவும் சூரன் இருந்த சிறப்பால் சூரனுடன் யுத்தம் செய்ய முருகன் புறப்பட்டார். நமக்கு முருகனின் அருளையும் சூரனின் தவத்தையும அறியும் பேறு கிட்டியது.

உய்த்திருக்கின்ற காலத்து
ஒய்யென எழுந்து காமர்
புத்தலர் நீபத்த ரான் புகழ்
மழு குலிசம சூலம்
சத்தி வாள் பலகை நேமி
தண்டுஎழுசிலை கோல்கைவேல்
கைத்தலம் கொண்டான்
என்னின் அவன் தவம் கணிக்கற் பாற்றோ

உ

## நீர்வேலிக் கந்தசாமி தேவஸ்தானம்

### இன்று கந்தசஷ்டி 2-ம் திருவிழா

பச்சைமயில் மீதேறி பண்ணவரின் துயர்போக்கி
இச்சகத்தில் எமக்கெல்லாம் இன்னருளை ஈந்தகந்தா
மெச்சவரும் நீர்வேலி மேவியே அமர்ந்தருள்
நச்சினார்க் கினியவனும் நணுகினையே நாயகமே.

— பண்டிதர் நீ. சி. மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

7 மாத தூய இன அல்சேஸியன் பெண் நாய் இ ண்டு விற்பனைக்குண்டு தொடர்பு: V செல்வம், 132, ஆடியபாதம் ரோட், கொக்குவில் மேற்கு. கொக்குவில். (C 5552)

சுன்னுகம்
பல நோ கூ. சங்கம்
(வரையறுள்ளது)
சுன்னுகம்

### கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தின் 24 ஸ்ரீ 9746 இலக்க (Leyland) லொறிக்கு முழுமையான உடற்கோப்பு (Body) அமைப்பதற்கு, உடற்கோப்பு அமைப்பவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன கேள்விப் பத்திரங்களை சங்கத் தலைமை நிலையத்தில் வேலை நாட்களில் ரூ 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் கேள்விப் பத்திரங்கள் 19 11-86 பிற்பகல் 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்
சுன்னுகம் பல நோ. கூ.
சங்கம்,
சுன்னுகம்.
31-10-86. (A 3047

உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்

### கேள்விப் பத்திர அறிவித்தல்

(அ) மேற்படி சங்கத்தில் உள்ள 26 ஸ்ரீ 6568 என்னும் இலக்க இசுசு லொறிக்கு உருவம் அமைக்க விண்ணப்பம் கோரப்படுகின்றது

(ஆ) 26 ஸ்ரீ 6568ம் இலக்க லொறியில் தற்பொழுதுஉள்ள உருவம் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனவுக்கு உண்டு.

விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர் மேலதிக விபரம் தேவைப்படின் பொது முகாமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

இதற்கு சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள படிவத்தில் மாத்திரம் விண்ணப்பம் அனுப்பவும்.

விண்ணப்பம் அனுப்பும் கடைசித் திகதி: 10-11-86

பொதுமுகாமையாளர்.
(A3034)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

லிடோ
10-30, 2-30, 4-30 6-30
HolCroft
Convenant
(Full of Suspense and Action) (Color)


# மினிசினிமா திரைப்படங்கள் தணிக்கை செய்யப்படும்

## ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் ''மினிசினிமா நிறுவனங்களில் காண்பிக்கப்படும் திரைப்படங்கள் அனைத்தும் தணிக்கை குழுவினுல் பரிசிலிக்கப்பட்ட பின்பே காண்பிக்க அனுமதிக்கப்படும்'' என்று மினி சினிமா ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது போராட்டத்தின் போராடும் மக்களின் சிந்தனைகளை திசைதிருப்பும் நோக்குடன் வெளிநாடுகளின் இருந்து ஏராளமான படங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன இவற்றினைச் சீர்செய்து கலாசாரச் சீரழிவைத் தடுப்பதற்கு மினி சினிமா ஒன்றியம் தணிக்கைக்குழு ஒன்றை ஏற்படுத்தி உள்ளது தணிக்கைக்கு உட்படுத்தப்படாதபடங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் அத்துடன் நவம்பர் மாதம் 15ம் திகதி வரை புதிய மினி சினிமா நிறுவனங்கட்கான ஒத்திசைவு பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது அத்துடன் சுகாதார வசதிகுறைந்த மினி சினிமாக்கள் இருவாரத்தினுள் அவ்வசதிகளை பூர்த்தி செய்யாவிட்டால் அந்நிறுவனங்களின் ஒத்திசைவுப்பத்திரங்களும் ரத்துச்செய்யப்படும். (ஒ)

# ஈ. எம். எஸ். அவசர 'மருத்துவ' உதவிச்சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு 'யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து கடந்த மாதம் 29-ம் திகதி மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் காயமடைந்தவர்களை அவசர மருத்துவ சேவைத் தொண்டர்கள் (ஈ. எம் எஸ்.) பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவந்து சேர்த்து அவசர சிகிச்சைக்கு உட்படுத்தினார்கள்.'

இதேவேளை அன்று பாதிக்கப்பட்ட மக்களின் உடமைகளைப் பாதுகாத்து உரியவர்களிடம் ஒப்படைத்தனர். மரணமான திரு. தம்பிராஜா ஜெகதீசன் என்பவரின் ஒன்றரைப் பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலி 235 ரூபா பணம், கைக்கடிகாரம் என்பன உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை பாதிக்கப்பட்ட பலர் தமது பொருட்கள் சில காணமல் போய்விட்டதாக தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் அன்றையதினம் பாதிக்கப்பட்டவர்களின் பொருட்கள் பணம் முதலியவற்றை யாராவது கண்டு எடுத்திருந்தால் அதை யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு அவசர மருத்துவ சேவையினர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (ஒ

# மாங்குளத்தில் படையினரால் நான்கு பேர் கைது

ஒட்டுசுட்டான், ஞாயிறு மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து வெளியேவந்த இராணுவத்தினரால் நகர் சுற்றிவளைக்கப்பட்டு முகமூடி அணிந்த தலையாட்டியின் செயலால் ஒரு தபால் ஊழியர், இருவர்த்தகர், ஒரு விவசாயி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்களாகிய சு. நாகதாஸ் (26 வயது) தபால் ஊழியர் க கணேஷ் (29 வயது) ப பால சுப்பிரமணியம் (26 வயது) வர்த்தகர்கள் சி. சிவரத்தினம் (45 வயது) விவசாயி ஆகியோர் விசாரணையின் பின் ஹெலிகொப்டர் மூலம் வவுனியா முகாமுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

## சென்னை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சகல நடவடிக்கைகளுக்கும் தமது முன்னணி முழு ஆதரவு வழங்குமென்றும் இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களை தமது முன்னணியிலிருந்துவிலக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

### த. வி கூ. கவலை

இதனிடையே தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள அறிக்கையொன்றில், இன்று நடைபெற்ற சம்பவத்தையிட்டு தாம் ஆழ்ந்த கவலையடைந்திருப்பதாகவும், தமிழக மக்கள் தமக்களித்துவரும் ஆதரவை தொடர்ந்துமளிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது. (ஊ)

## ராஜீவ்---

(1 ம பக்கத் தொடர்ச்சி)

இருமணிநேரம் விமானமொன்றை இதற்கென அவர் செலுத்தினர் அவ்வேளை அவ் விமானநிலையத்தின்சகலவெளிநாட்டு, உள்நாட்டு விமானச் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

பிரதமரானதையடுத்து கடந்த இருவருடங்களாக அவர் விமானங்கள் எதையும் ஓட்டவில்லை இதன்காரணமாகஅவரது விமான 'லைசென்ஸ்' ரத்தாகும் நிலையிலிருந்தது இதனையடுத்தே திரு. ராஜீவ் காந்தி தாமாக விமானமொன்றைச் செலுத்தி தமது லைசென்ஸ் பதிவைப்புதுப்பித்தார்

விமான 'லைசென்ஸ்' விதிகளின் கீழ் அதனை வைத்திருப்பவர் அடிக்கடி சில மணிநேரம் விமானத்தைச்செலுத்தவேண்டும். இல்லையேல் அது ரத்து செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## மட்டு. பெரிய---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமாண்டோக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பெண் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

பெரிய போரதீவில் நேற்று நடைபெற்ற தேடுதல்வேட்டையில் தபாலதிபர், உப தபாலதிபர் உட்பட நாற்றுக் கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர்.

உன்னிச்சைப் பகுதியிலும் தற்காலிக முகாமிட்டுள்ள கமாண்டோக்கள், தேடுதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

## சிவில் நிர்வாகம்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றைத் தாமே திருத்தவேண்டியுள்ளதாகவும்அத்துடன்மாநகர சபை நிர்வாகத்தையும் நடத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### பணநோட்டுக்கள்

எல்ரிரிஈ புதிய பணநோட்டுக்களைப்புழக்கத்தில்விடஇருப்பதினைப்பற்றிக் குறிப்பிடுகையில், அடுத்த ஆண்டு முதல் இவற்றைப்புழக்கத்தில் விடத்தாம் உத்தேசித்துள்ளதாகவும், ஆயினும் இதுமிகவும்சிக்கலானபணி எனவுப் கூறினர்.

'புளொட்'இயக்கத்தைதாம் தடைசெய்யவில்லை எனக்கூறிய அப்பேச்சாளர் இவ் வியக்கத்தினர் மக்களை இம்சைப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டால் தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டியேற்படும்என அண்மையில் யாழ். நகரில் எல்ரிரிஈ அறிக்கையொன்றை விடுத்ததாகவும் கூறினர்.

ஆதாரம்: ஹிந்து
(கூ-ஊ)

# தேங்காய்திருடர் பிடிபட்டனர்

சுண்டுக்குளி, வெள்ளி தேங்காய்க்களவில் ஈடுபட்டு வந்த இரு நபர்கள் ஆனைக்கோட்டை விழிப்பு மன்ற தொண்டர்களினுல் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் கல்லுண்டாய் பகுதியில் நடைபெற்றது.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் தேங்காய்கள் பெருமளவில் களவுபோவதாக ஆனைக்கோட்டை விழிப்பு மன்றதொண்டர்களின்கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து அப்பகுதிகளில் இவர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வேளையில்இரு நபர்கள் கல்லுண்டாயில் தேங்காய்களுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நிற்பதைக்கண்டு விசாரணைசெய்தபொழுது இவர்களது திருட்டு அம்பலமானது. இவர்கள் இருவரையும் தேங்காய்களுடன் அழைத்துவந்த தொண்டர்கள் பின்னர் அப்பகுதி இளைஞர் முகாமில் இவர்களை ஒப்படைத்துள்ளனர்.

## வடமராட்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகைமை பெற்றுள்ளனர். இக் கல்லூரியின் மாணவிகளான எஸ் காமினி மூன்று ஏ, ஒரு பீயும் பீ சுகந்தி மூன்று ஏ, ஒரு சியும் பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் ஐம்பது வீதமான மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிபெறும் தகைமையினைப் பெற்றுள்ளனர் இக்கல்லூரியின் மாணவி மாதினி செல்லத்துரை இரண்டு ஏ, இரண்டு பீ பெற்றுள்ளார்.

பருத்தித்துறை வேலாயுத வித்தியாலயத்தில் நாற்பதைந்து வீதமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறும் தகைமையினைப் பெற்றுள்ளனர். இங்கு செல்வன் எஸ் தர்மகுலசிங்கம் மூன்று ஏ, ஒரு சீயும், ஏ சண்முகநாதன் இரண்டு ஏ, ஒரு பீ, ஒரு எஸ் என்ற அடிப்படையில் சித்தியடைந்துள்ளார்.

## அழுகிய நிலையில்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொலை தொடர்பாக போராளிகள் இயக்கம் ஒன்றினுல் இருவர் கைது செய்யப்பட்டதையடுத்தே இத்தகவல் தெரியவந்துள்ளது. காணமல்போன பணத்தின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் ஒட்டுசுட்டான் மக்களின் பார்வைக்காக போராளிகளினுல் வீதிகளெங்கும் கொண்டு செல்லப்பட்டனர். இதேவேளை தலைமறைவாகியுள்ள ரவியை கைது செய்வதற்கு குடாநடெங்கும் தீவிர தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ரா)


## அந்தியேட்டி அழைப்பு

சண்முகஐயர்
சிவசம்புக் குருக்கள்

துன்னலை வடக்கு சண்முகஐயர் சிவசம்புக் குருக்களின் பாஷாண உத்தியாபனம், ஏகோதிட்டம் சபிண்டீகரணக் கிரியைகள் 4ம், 5ம், 6ம் திகதி காலை நடைபெறுமென்பதை அறியத்தருகின்றோம்.

சி முத்துச்சாமி சர்மா,
சி சிவானந்த சர்மா,
சி. சத்தீஸ்வரசர்மா.

சங்கக்கடை ஒழுங்கை,
துன்னலை வடக்கு,
கரவெட்டி.

C 5555

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி வள்ளிமுத்து உருத்திரபிள்ளை
(சரஸ்வதி)

அன்னை மடியில்: 18-7-34
அமலன் அடியில்: 13 11-85
திதி துதிகை: 03-11-1986

அன்பின் தீபமாய் அணையாச் சுடராய் பண்பின் இலக்கணமாய் பாரினில் வாழ்ந்து உற்ருர், உறவினர், அயலார் போற்ற நடந்த எங்களின் ஒளி விளக்கே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு என்ன பல யுகங்கள் தான் போனாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும், அன்புக் கணவர், சகோதரர் மைத்துனர், மைத்தினிமார், மருமக்கள், உற்ருர், உறவினர்.

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

C 5553

## வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரர் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்.

02-11-86 ஞாயிற்றுக்கிழமை முதல் 7-11-86 வெள்ளிக்கிழமை வரை காலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு சண்முகா அர்ச்சனையும் நடைபெறும். வெள்ளிக்கிழமை மாலை சூரன்போரும் நடைபெறும். பக்தர்கள் வருகைதந்து இறைவன் அருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

தேவஸ்தானம்.

(A 3046)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-வது ஆண்டு கண்ணீர் அஞ்சலி



செல்வி நிமால்னி வீரசிங்கம்
(பாப்பா)
அன்னையின் மடியில்: 11 04-1972
அரக்கரின் பிடியில்: 2 -10-1984
திதி: 03-11-1986

தாயெந்தன் வயிற்றினிலே தரணியில் முதல் உதித்தவளே! மருத வசந்தமென்று எம்வாழ்க்கையில் பதித்தவளே! மங்கல நாள்பார்த்து மங்கல நீராட்ட பார்த்திருந்தோம் மகளே நீசிய அரக்களின் காரால் பலியானாய் நினைவுகள் ஆயிரம் நெஞ்சில் விதைத்திட்டாய் காலமெல்லாம் உன் நினைவால் கண்ணீரில் வாழ்கிறோம். பெற்றமனம் வேதுதமா எத்தனையோ உனக்குச் செய்ய எண்ணியிருந்தோம். இவ்வுலகில் எம் ஆத்மா உள்ளவரை உன் ஆத்மா சாந்தியடைய தினமும் கண்ணீரால் பூப்போட்டு கடவுளிடம் இறைஞ்சி நிற்கின்றோம்.

உன்பிரிவால் தவிக்கும்:
அப்பா, அம்மா,
உடன்பிறப்புகள்:
லெனின்ராஜா, பாமினி, தீபராஜ், தயாழினி.
34/1 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5542)

## நான்காவது நினைவஞ்சலி

### திருமதி பற்குணராசா யோகம்மா

உதயம்: 25-12-1929
உதிர்வு: 14-11-1982

அன்பே உருவான எங்களைக் காத்திட்ட குலவிளக்கே நீங்கள் மறைந்து நான்காவது ஆண்டு பூர்த்தியாகியும் எம் உள்ளத்தில் பிரகாசித்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். கணவன், பிள்ளைகள், பேரன்மார், பேத்தி தம்பிமார், மருமக்கள்:

யோகா டெயின் ஹவுஸ்,
டைவ் ஸ்ரோர்ஸ் சுவிறஸ் இன்டஸ்றீஸ்,
ஓட்டுமடம,
யாழ்ப்பாணம். C 5537

## அரை ஆண்டு நினைவஞ்சலி



மு. கனகராஜா
(தொலைத்தொடர்புத் திணைக்கள இயந்திரவியல் ஊழியர்)
தோற்றம்: 29-5-1935
மறைவு: 02-05-1986

அன்பின் இருப்பிடமாய், திகழ்ந்தவரைப் பிரிந்து ஆறாத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள்.

வயிராக்கண்டி,
கோப்பாய்.
C 5540

## பங்குத் தந்தை நியமனம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு மாதகல் பங்குத் தந்தையாக அருட்திரு ஜெ ஜிராஜேஷ்வரன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாதகல் பங்குத் தந்தையாக ஐந்து வருடங்களாகக் கடமையாற்றிய அருட்திரு கங்ஸ்லி சந்தியாப்பிள்ளை அடிகளை மயிலிட்டி பங்குத் தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. [சி]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
ம. பொன்னுத்துரை
மலர்வு: 02 05 1917
உதிர்வு: 13-11-1985
திதி: 02-11-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து! எம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி வாழ வழி காட்டிய தந்தையே! எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் திருவுருவ நிழல் எங்கள் கண்முன் தினமும் நடமாடிக் கொண்டேயிருக்கின்றது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மாவிட்டபுரம் தெற்கு.
தெல்லிப்பளை.
[C5545]

## கோட்டை நோக்கிச் சென்ற பெண் மனநோயாளி இராணுவத்தின் சூட்டுக்குபலி

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பளை ஆஸ்பத்திரி மன நோயாளர் பிரிவிலிருந்து வெளியேறிய, நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. த. தேசமொழி அம்மை (வயது 61) இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்.

இது சம்பந்தமாக மேலும் தெரிய வருவதாவது: திருமதி த. தேன்மொழி அம்மை சென்றமாதம் 28ம் திகதி மன நோய் சிகிச்சை பெறுவதற்காக தெல்லிப்பளை மன நோயாளர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். திடீரென அவர் கடந்த 28ம் திகதி வாட்டிலிருந்து காணாமல் போயுள்ளார். அதன் பின்பு யாழ பொலிஸ் நிலைய பாதையால் கோட்டை இராணுவ முகாமுக்குள் நுழைய முற்பட்டிருக்கிறார் இதன் பின்பு இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி இறந்ததாக அறியவருகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
யோகேஸ்வரி
வேலாயுதபிள்ளை
(ராசாத்தி)
மறைவு: ஐப்பசி மாத அமரபட்ச சதுர்த்தசி

அன்பின் சிகரமாய் அறிவின் உறைவிடமாய் எமையெல்லாம் அரவணைத்து வழியமைத்த தெய்வமே உன் துயர்தாங்காது கலங்குறுகிறோம். உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின் கணவர், மகள் சாந்தினி. மருமகன்: தவராசா, உறவினர்.
33, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். C 5534

## ஒறேற்றர் சுப்பிரமணியத்திற்கு லண்டனில் விருந்துபசாரம்

யாழ்ப்பாணம் திங்கள்

இங்கிலாந்துச் சுற்றுலாவை மேற்கொண்ட பிரபல ஆசிரியரும் அதிபருமான ஒறேற்றர் சுப்பிரமணியத்திற்கு அவருடைய பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் வருகிற ஞாயிற்றுக்கிழமை (9-11-86) லண்டனில் இராப்போசன விருந்தளித்து பாராட்டுவழங்குகின்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 18 ஆண்டுகள் அதிபராகவும் அருஞ்சேவையாற்றிய திரு சுப்பிரமணியத்திற்கு ஏராளமான மாணவர்கள் சிநேகிதர்கள் இங்கிலாந்தின் பலபாகங்களிலும் வாழ்வது குறிப்பிடத்தக்கது


# விவசாயிகளே!

உங்கள் வயல்களில் நெல்லுடன் போட்டியிட்டு வளரும்

கோழிச்சூடான், நெற்சப்பி, மொண்டி, குதிரைவாற்புல், ஆடிப்புல், பன்கோரை வகைகளை

சேர்கோப்பூர் 36% 450 மி லீ. ரூ. 69/- 3. லீ. ரூ. 410/-
(புரொபனில் — 3, 4 டீ. பி. ஏ.)

பாவித்து சிறப்பாக கட்டுப்படுத்தி கூடிய விளைச்சலை உறுதி செய்துகொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

ஹேகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு ஜேர்மன் தயாரிப்பு [A 3023]



## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் 10-11-86 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டும்.


கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் "வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட வேண்டும் கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப்பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும், விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா 5/- ஐயும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ இன்றேல் தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பிவைத்தால் கேள்விப் பத்திரம் உரியவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

### வெற்றுச்சாக்கு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மா (பெரிது) (67 கி கி.) | — | 08 |
| 2. | மா (சிறிது) (55 6 கி. கி.) | — | 970 |
| 3. | அரிசி நம். 1 | — | 324 |
| 4. | அரிசி 2 அந்தர் | — | 243 |
| 5. | அரிசி 1 அந்தர் | — | 195 |
| 6. | சீனி | — | 257 |
| 7. | நவதானியம் | — | 109 |
| 8. | இழக்கம் | — | 815 |
| 9. | சர்க்கரை | — | 27 |
| 10. | கற்கண்டு | — | 11 |
| 11. | பை | — | 41 |
| | மொத்தம் | | 3000 |

பதில் பொது முகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்.
[A 3031]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவ முன்னணியினரின் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள் ''மாணவர் முன்னணியின ரால் பாடசாலைகளுக்கிடை யில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டப்போட்டியில் நேற்றுமுன்தினம் முதல் நடை பெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சாவகச்சேரி இந் துக் கல்லூரியை யாழ்ப் பாணக் கல்லூரி 3—1 கோல் கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

இப் போட்டிக்கு மத்தியஸ்த ராக திரு சம்பந்தன் கடமை யாற்றினர்.

## ஸ்கந்தா வெற்றி

இரண்டாவது ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல் லூரியை எதிர்த்து ஸ்கந்தவ ராதயக் கல்லூரி மோதியதில் 4—2 கோல்களால் மானிப்பாய் இந்துக் கல்லூரியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வென்றது. இவ்விரு கல்லூரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் மிகவு சுறுசுறுப்பாகவும் விறுவிறு பாகவும் ரசிகர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியிருந் தது குறிப்பிடத்தக்கது

இவ்விரு போட்டிகளும் மானிப்பாய் இந்துக்கல்லூ யில் நடைபெற்றன. (வா)

## இன்று ஸ்கந்தா நெல்லியடி மோதல்

யாழ்ப்பாணம், திங்கள் மாணவர் முன்னணியின ரால் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டுவரும் உதை பந்தாட்டப் போட்டியில் இன்று சுன்னாகம் ஸ்கந்த வரோதய கல்லூரியும், நெல்லி யடி மத்தியமகா வித்தியாலய மும் மோதுகின்றன

இந்த உதைபந்தாட்டப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது. (வா)

யாழ். மாவட்ட

# க. பொ த (உ.த) பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், திங்கள் கடந்த ஆகஸ்டில் நடை பெற்ற க. பொ த உயர் தரப் பரீட்சையில் சிறப்பு பெறுபேறுகள் பெற்ற மாண வர் விபரம்:

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி செல்வி ப. லதி பாலகிருஷ்ண 4 ஏ. பி (கணிதம்), ஜி சிவா ஜினி ஏ, 3 பி (உயிரியல்), சந் திராபதி இமானுவல் ஏ. பி,2 சி (வர்த்தகம்). ஜி. காயத்திரி ஏ. 3 பி (கலை);

உருமபராய இந்துக் கல் லூரி: செல்வன் ஆனந்த ராசா 2 ஏ. 2 சி [வர்த்தகம்] வேம்படி மகளிர் கல்லூரியில் சிறப்பு பெறுபேறு பெற்ற ஏனை யோர் விபரசெல்வி க. ஜெய நந்தினி 2 ஏ, 2பி (உயிரியல், செல்வி கை.சுகிலா 2ஏ 2பி (வர்த்தகம்)செல்விகளிகுவி வ ானந்தி ப ஜமுனா ஆகியோர் ஏ, 3பி (உயிரியல்) பெற்றுள் ளனர்.

செல்விகள் ப. எலிஸபெத் லதா, கு.கலையாசி ஆகியோர் 2ஏ. பி, சி (கணிதம்) பெற்றுள் ளனர்,

செல்விகள் ந. விஜிதா, அ. கயல்விழி, ச சுகிர்தா, ந ரமணி ஆகியோர் உயிரியல் பிரிவிலும், செல்வி ப. கமல குமாரி கலைப்பிரிவிலும், ஏ. 2 பி சி பெற்றுள்ளனர், இக் கல்லூரியினர் விஞ்ஞான பிரிவிலிருந்து 87 பேரும் கணிதப் பிரிவிலிருந்து 27 பேரும் வர்த்தக பிரிவிலிருந்து 44 பேரும் 23 பேர் கலைப்பிரி விலிருந்தும் பல்கலைக்கழகத் திற்கு தெரிவு செய்யப்பட தகுதி பெற்றுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நா. சுகந்தன் 4ஏ (கணிதம்), ஞா. உமையோன் 2ஏ, 2பி, செ. மேரி சுரூபினி ஏ, 3பி சி. ராதை ஏ 3பி. ஆகியோர் உயிரியல் சு. கல்யாணி 4பி, வர்த்த கம். கலை:- பா. பாலகுமார் 2ஏசிஎஸ்தி.3பி.சி.பிறேமலதா எஸ். சர்வலோஜினி ஏ. பி, சி, எஸ். ஆகியோரும் கலை,

78 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதிபெற தகுதி பெற்றுள்ளார்கள்.

## மீளாய்வு செய்தல்

இதேவேளை இப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்குரிய விண்ணப்பங் களை நவம்பர் 7ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க லாம் என அறிவிக்கப்படுகி றது, [ஊ]

## சைக்கிள் திருட்டு

உடுவில், ஞாயிறு மருதனுமடத்திலுள்ள தேநீர்க் கடையொன்றில் தேநீர் அருந்துவதற்காக கடை வாசலில் தமது சைக் கிளை நிறுத்திவிட்டு கடைக் குள் சென்றவர் தமது சைக்கி ளைப் பறிகொடுத்த சம்பவம் நடைபெற்றது.

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தவேளையில் அச்சு வேலியைச் சேர்ந்த ராஜன் தனது மருமகனுடன் சைக்கி ளில் மருதனுமடம் சந்தியி லுள்ள தேநீர்க் கடையொன் றின் முன் தமது ஹீரோ'' சைக்கிளை வைத்துவிட்டு கடைக்குச் சென்ற வேளையில் சைக்கிள் களவாடப்பட்டது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
சின்னையா சிவலிங்கம்
[முன்னைநாள் அதிபர் தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி தெல்லிப்பளை]

தோற்றம்: 01 08 1927
மறைவு: 05-10-1987
திதி: 04-11 1986

05-10-86ல் அமரத்து வம் எய்திய எமதகுடும் பத் தலைவர் அமரர் சின்னையா சிவலிங்கம் அவர்களின் ஆத்ம சாந் திக் கிரியை அன்னாரின் இல்லத்தில் (4 11-86) எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 11 மணி யளவில் நடைபெறவுள் ளது. அத்தருணம் உற் றார், உறவினர், அன் பர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம்.

அவரின் ஈமக்கிரியை யிற் கலந்துகொண்ட சகலருக்கும், சகல வகை யில் உதவியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் சிறப்பாக தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி அதிபர், ஆசிரிய, சாரணிய, மாணவகுழாத்துக்கும், யூனியன் கல்லூரி அதி பர், ஆசிரிய, மாணவர் களுக்கும் நோய்வாய்ப் பட்டு வைத்தியசாலை யில் தங்கியிருந்தவேளை சகல விதத்திலும் உதவி நல்கிய தெல்லிப் பளைமாவட்டவைத்திய அதிகாரி உட்பட சகல வைத்தியசாலை ஊழியர் களுக்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.
(C 5548)



மீண்டும் இலங்கையில்

லோர்ஸ்பேன்* 40 ஈசி

குளோர்பைரிபோஸ் 40%






எச்சரிக்கை:- எல்லா பீடை நாசினிகளும் அபாயகர மானவை கவனமாக கையாளவும்.

விவசாயிகளின் முதல் தேர்வு

பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்,

| | |
|---|---|
| 100 மி.லீ. | ரூ. 55/- |
| 200 மி.லீ. | ரூ. 98/- |
| 500 மி.லீ. | ரூ. 215/- |
| 1 லீட்டர் | ரூ. 420/- |

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன்
பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 3-11-86

# "அமெரிக்க உதவியுடன் திருமலையில் சமுத்திர மின்சக்தி நிலையம்!"

(கொழும்பு)

திருகோணமலையில் சமுத்திர மின்சக்தி நிலையமொன்றை அமைப்பதற்கு அமெரிக்கா உதவ முன்வந்துள்ளது, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சிறில் பொன்னம்பெருமா அண்மையில் அடிப்படைக் கல்வி நிலையமொன்றில் நிகழ்த்திய விரிவுரையொன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

இந்த மின்சக்தி நிலையத்தை அமைப்பதற்கு அமெரிக்கா தொழில் நுட்ப மற்றும் நிபுணத்துவ உதவிகளுடன் 25 கோடி ரூபாவையும் வழங்க முன்வந்திருப்பதாக பேராசிரியர் பொன்னம்பெருமா மேலும் தெரிவித்துள்ளார்.

100 மெகாவாட் மின்சாரத்தை இச் சமுத்திர மின்சக்தி நிலையம் மூலம் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடல்நீர் மேல் மட்டத்தில் பதியும் சூரிய கதிர்களிலிருந்தே இந்த சமுத்திர மின்சக்தி பெறப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய மின்சக்தி பெறுவதற்கு திருகோணமலையே தகுந்த பிரதேசமென்று பிரபல விஞ்ஞான எழுத்தாளரான டாக்டர் ஆர்த்தர் ஸி. கிளார்க் 25 வருடங்களுக்கு முன்னர் சிபார்சு செய்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் எஸ். நாகராசா வவுனியா மாவட்ட நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் இன்று 3ம் திகதி தமது பதவியைப் பொறுப்பேற்பார்.

நேற்றுமுன்தினம் அவருக்கு யாழ் சட்டத்தரணிகள் பிரிவுபசாரமளித்தனர். (இ)

## இனந்தெரியாத சடலம்

யாழ்ப்பாணம், திங்கள்

சுமார் 70 வயதான வயோதிபர் பெருமாளின் சடலம் பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

18ம் வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று முன்தினம் மரணமானார். இவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஔ)

## 1987 ஜனவரி முதல்

# இடமாற்றம் பெறும் யாழ். வைத்திய அதிகாரிகள்

டண்டத்தரிப்பு, வெள்ளி

யாழ் மாவட்டத்திலிருந்து ஒன்பது பதிவுசெய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

1987ம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் இடமாற்றத்திற்கான அறிவித்தல்கள் கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் கடந்த வாரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெற்றுள்ளவர்களின் விபரம் பின்வருமாறு:-

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் திருமதி பி. சிவானந்தன் அடம்பன் வைத்தியசாலைக்கும், சங்கானை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எம். ஏ. இராசரத்தினம் அம்பாறை மாவட்டத்திலுள்ள மூவன்கல வைத்தியசாலைக்கும், வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் என். கந்தையா கிளிநொச்சி வைத்தியசாலைக்கும், ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எஸ் பாலச்சந்திரன் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள கட்டியாவ அரசினர் வைத்தியசாலைக்கும், கரியாலை நாகபடுவான் அரசினர் மருந்தகப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். அம்பிகைபாகன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் திருமதி எஸ் கோபாலரத்தினம் மாத்தளை மாவட்டத்திலுள்ள கிபிஸ வைத்தியசாலைக்கும், கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எஸ் சிவயோகநாதன் அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜாங்கனை வைத்தியசாலைக்கும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களின் இடங்களுக்கு தற்போது வெளிமாவட்டங்களில் கடமையாற்றிவரும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இடமாற்றம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

## பெரியபோரதீவில்———

# புலிகளின் கண்ணிவெடிக்கு ஜீப் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், திங்கள்

"பெரியபோரதீவில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வைக்கப்பட்ட தரைக்கண்ணி வெடித் தாக்குதலில் வண்டி ஒன்று பலத்த சேதமடைந்தது" என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

தரைக்கண்ணி வெடியின் பின், ஏற்பட்ட நேரடி மோதலின்போது கொல்லப்பட்டும், காயமடைந்தும் இருந்த கமாண்டோக்களை எமது எதிர்த்தாக்குதலின் மத்தியிலும், ஹெலிகொப்டர் ஒன்றின் மூலம் ஏற்றிச்சென்றனர்.

சேதமடைந்த ஜீப் வண்டியை அவ்விடத்திலேயே விட்டு விட்டு மற்ற இரு ஜீப் வண்டிகளிலும் இருந்த கொமாண்டோக்கள் பின்வாங்கினர்.

இத்தாக்குதலின் இறுதியில் கமாண்டோக்களின் பல தலைக்கவசங்கள் அவ்விடத்தில் காணப்பட்டன. (வா)

## ராஜினாமா

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குனர் சபையிலிருந்து உறுப்பினர் என். சிவசுப்பிரமணியம் ராஜினாமாச் செய்துள்ளார்.

## ரோந்து வாகனம் தகர்ப்பு:

# ஐந்து கமாண்டோக்கள் நேரடி மோதலில் பலி!

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொடுவாமடுவுக்குக் கண்மையில் ரோந்துசென்றுகொண்டிருந்த கமாண்டோக்கள் வாகனங்கள் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொண்டதில் ஒரு பவ்விள் வாகனம் முற்றுச்சிதைந்தது. இதிலிருந்த 5 கொமாண்டோக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் வந்தாறுமூலை முகாமிலிருந்து கொமாண்டோக்கள் ஒரு பவ்விள் ஆமட்காரிலும். இரண்டு கவசவாகனங்களிலும் கரடியனாறு நோக்கி ரோந்துசென்றுகொண்டிருந்தனர். கொடுவாமடுவுக்கு அண்மையில் கொமாண்டோக்கள் வந்துகொண்டிருந்த சமயம் எமது வீரர்கள் தரைக்கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியதில் பவ்விள் ஆமட்கார் முற்றுச்சிதைந்தது. அதில் வந்த 5 கமாண்டோக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். கண்ணிவெடித் தாக்குதலையடுத்து இடம்பெற்ற நேரடி மோதலின் இறுதியில் கொமாண்டோக்கள் பின்வாங்கினர்

அதே சமயம் தாண்டியடி, வெல்லாவெளி, 36ம் முகாம் ஆகிய முகாம்களிலிருந்து கொமாண்டோக்கள் வெளி வந்த போதும் எமதுவீரர்களின் எதிர்த்தாக்குதலையடுத்து கமாண்டோக்கள் பின்வாங்கினர். (மா)

## பொலன்னறுவையில்

# ஹெலி இறங்கும் வசதியுடன் இராணுவ ஆஸ்பத்திரி பிரிவு!

பொலன்னறுவ, ஞாயிறு

ஹெலிகொப்டர் இறங்கும் வசதியுடனான புதிய இராணுவ ஆஸ்பத்திரிப் பிரிவு ஒன்று நேற்று பொலன்னறுவையில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ் போராளிகளுடனான மோதல்களில் காயமடையும் பாதுகாப்புப் படையினருக்கு அவசர சிகிச்சை அளிக்கும் வகையிலே இந்த ஆஸ்பத்திரி பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் காயமடைந்த பாதுகாப்புப் படையினர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலன்னறுவ பெரியாஸ்பத்திரிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த வார்ட்டுக்கு சுமார் ஆறு லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது இருபத்திநான்கு கட்டில்கள் போடப்பட்டுள்ளன, மூன்று விஷேட வைத்திய நிபுணர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள. (ரா)

கோட்டை ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் சடலம் யாழ். பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கபபட்டுள்ளது. இவரின் சடலத்தை இவருடைய கணவன் தர்மலிங்கம் அடையாளம் காட்டினார். மரண விசாரணைக்கான ஏற்பாடுகளை ஆஸ்பத்திரிப் பொலிஸார் ஏற்பாடு செய்துள்ளனர். (ஔ)


# மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் பாலச்சந்திரன்

(முன்னாள் இடாவத்தை எஸ்டேட் முதலாம் ரீமேக்கரும், WEWESSE தோட்ட நிர்வாகியும்)

சோமசுந்தரம் பாலச்சந்திரன் காலமானார். இவர் உரும்பராய் வடக்கு காலஞ்சென்ற சோமசுந்தரம் திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் குகதாசன், சரோஜினிதேவி, நாகேஸ்வரி, காலஞ்சென்ற யோகேஸ்வரி, ஜெகதீஸ்வரி இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், காலஞ்சென்ற தெய்வேந்திரா, சிவகுமாரன், ஆகியோரின் மைத்துனரும், மலேசியா காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிவசம்பு (மலேசியா) சிவஞானம் (பென்சனியர்) ஆகியோரின் மருமகனும், ஜெயக்குமார் (நோர்வே) ஜெயரூபன் (நோர்வே) ஜெயராஜ், சுரேஸ்குமார். ஜெயந்தினி, ஜெயராகவன். லவகுமார் ஆகியோரின் மாமனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-11-86 திங்கட்கிழமை இன்று பிற்பகல் 3 மணியளவில் உரும்பராயில் நடைபெறும்

S. குகதாசன்,
பைங்கரன்.

உரும்பராய்; (C 5554)

### கந்தையாபிள்ளை பரமசிவம்பிள்ளை
(சட்டத்தரணி)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த கந்தையாபிள்ளை பரமசிவம்பிள்ளை (பிரபல சட்டத்தரணி) சிவபதம் அடைந்துவிட்டார், அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் K K A. கந்தையாபிள்ளை செல்லம்மா ஆகியோரின் அருமைப்புதல்வரும், நாகம்மா கந்தையாபிள்ளையின் பெருமகனும், பரமேஸ்வரி, நடராஜா (K.K A கந்தையாபிள்ளை கடை உரிமையாளர் வர்த்தகசங்கத் தலைவர்), கோமளாம்பாள், கௌரிநாயகி, கனகராஜா (சின்னத்துரை அன் பிரதர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி (J P), ஞானகலை. செல்வரத்தினம் (இளைப்பாறியகிறின்வேஸ் Bank உத்தியோகஸ்தர்), நேசராஜா (புனிதா யுவலரி மாட் உரிமையாளர்), பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், செங்கதிர்ச்செல்வன். கிரிதரன், கீதா (V. G. H S), சஞ்சீவ் ஆகியோரின் அருமைமாமனும், திலகவதி, தங்கேஸ்வரன், திருமகள், திருக்குமார் ஆகியோரின் சிறியதகப்பனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (இன்று) 3-11-1986 திங்கட்கிழமை பி ப. 1-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்,
80, பலாலிவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(C 5551)

# மரண அறிவித்தல்

### திருமதி செல்வமணி துரைசிங்கம்

திருமதி செல்வமணி துரைசிங்கம் காலமானார். அன்னார் திரு ச. துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், சிவானந்தராணி, சந்திரகுமார், இந்திரகுமார், இந்திராணி. பிரேம்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ராணி தர்மலிங்கம், காலஞ்சென்ற திருமதி அன்னரட்னம் பத்மநாதன், திருமதி அற்புதம் இராசநாயகம், திரு. A. S இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (3-11-86) பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூங்கொடை மயானத்தில் தகனம்செய்யப்படும்.

கள்ளிஓலை, டச்வீதி,
உடுவில்.
(C-5556)

தகவல்:
ச. துரைசிங்கம்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49 Telegram Eelanadu Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org